OTHER FEES
Course Work Certificate
Degree ...

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(with UGC 2(f) & 12 (B)Status and NAAC Accredited with "A" Grade in 1st Cycle)
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Karapakkam , Chennai - 600 097.
Phone: 044 - 28389040 Website: www.tnteu.ac.in

No.TNTEU/COE/Circular/2024/1777 Date: 11.09.2024

**Prof.P.Ganesan,Ph.D**
**CONTROLLER OF EXAMINATIONS i/c**

**WEB POST**

பெறுநர்

முதல்வர்கள்/நிர்வாகிகள்
அனைத்து இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - பி.எட். இரண்டாமாண்டு - 2024-25 கல்வியாண்டு மூன்றாம் பருவத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு – கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு செல்வதற்கு உரிய பள்ளிகளை தமிழக அரசின் உயர்கல்வி/பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஒதுக்கப்பட்டுள்ளது - பள்ளிகளின் விவரங்களை சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு அனுப்புதல் - சார்பு.

பார்வை: ந.க.என்.038390/வி2/இ1/2024, நாள்:09.09.2024.

******

மேற்காண் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் 2024–25 ஆம் கல்வியாண்டில், மூன்றாம் பருவத்தில் பயிலும் பி.எட். இரண்டாம் ஆண்டு மாணாக்கர்கள் பல்கலைக்கழக பாடத்திட்டத்தின் படி, அரசு/அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் வருகின்ற 2024, செப்டம்பர் 12-ம் தேதி முதல் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அதன் அடிப்படையில், மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணாக்கர்கள் எந்த பள்ளியில் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்ற பள்ளிகளின் பட்டியல், இந்த கல்வியாண்டில் (2024-25), தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாக நிர்ணயித்து, பல்கலைக்கழகத்திற்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது. அப்பள்ளிகளின் பட்டியல் தங்கள் கல்லூரிக்கு இத்துடன் இணைத்து கல்லூரியின் College Login வாயிலாக அனுப்பப்படுகிறது.

எனவே, கல்லூரி முதல்வர்கள் கீழ்க்குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி கற்றல், கற்பித்தல் பயிற்சியினை சிறந்த முறையில் முடித்திட தங்களது சீரிய ஒத்துழைப்பினை நல்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## வழிக்காட்டு நெறிமுறைகள்

1. தங்கள் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகள் அனைத்தும் தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையால் அமைக்கப்பட்டுள்ள குழுவினால், தங்கள் கல்லூரி அமைந்துள்ள பகுதியினை Google Map–ல் கண்டறிந்து அதன் அடிப்படையில், சுமார் 15 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர் தேவையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

2. ஒதுக்கப்பட்ட பள்ளிகள் பட்டியலில் எக்காரணத்தைக் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது.

3. மாணாக்கர்களின் வருகைப்பதிவினை, சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர் வாயிலாக இணைய வழியில் கண்காணிப்பதற்கு தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. கற்றல், கற்பித்தல் பயிற்சி முடிந்தவுடன் பள்ளிக்கல்வித் துறையினால் மாணாக்கர்களின் வருகைப்பதிவுக் குறித்த அறிக்கை பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும். அந்த அறிக்கை கல்லூரி வழியாக சமர்ப்பிக்கும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு அறிக்கையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மட்டுமே பல்கலைக்கழகத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

5.பள்ளி ஒதுக்கீடு குறித்த கருத்துக்கள், சந்தேகங்களைக் tnteuschoolinternship2022@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு கல்லூரியின் பெயரைக் குறிப்பிட்டு செய்தியாகடைப் செய்து, அனுப்பி தெளிவுப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11/9/22

**CONTROLLER OF EXAMINATIONS i/c**

Copy to:

1. Dean
2. Controller of Examination
3. Deputy Registrars
4. P.A to VC
5. Assistant Registrars
6. Registrar's Office (File)
7. Notice Board

Kindly circulate to the staff members working under your control

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06.

ந.க.எண்.038390/வி2/இ1/2024, நாள்.09-09.2024.

பொருள்: பள்ளிக் கல்வி – 2024–2025 – அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு கல்வியியல் படிப்பு பயிலும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல் – அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவித்தல் – சார்பு.

பார்வை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக கடித எண் TNTEU/COE/BB/Teaching practice/2024/1490 நாள் 27.05.2024

-------------------

2024–2025 ஆம் கல்வியாண்டில் பி.எட், எம்.எட் பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் பயிற்சிக்காக சுமார் 80 நாட்கள் அரசு பள்ளிகளுக்கு செல்கின்றனர். 2022–ஆம் ஆண்டு முதல் இந்த பயிற்சி மாணவர்களுக்கான பள்ளி ஒதுக்கீட்டை, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் (TNTEU) வழிகாட்டுதலுடன் பள்ளிகல்வித்துறை இயக்குநரகத்தால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஒதுக்கப்பட்ட பயிற்சி மாணவர்களின் மாவட்டம், வட்டம் வாரியான பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பட்டியலை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது

இப்பட்டியல் TNTEU வழியாக அந்தந்த கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் கல்லூரிகளுக்கு ஏதேனும் சிரமம் இருந்தால், அவர்கள் அதை TNTEU விடம் நேரடியாக கொண்டு செல்வர். ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் ஒவ்வொரு பள்ளிக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுமே பள்ளிகல்வித்துறை இயக்குநரகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் எந்த மாணவர்களை ஒதுக்குவது என்பதை அக்கல்லூரியே முடிவு செய்யும்.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக (TNTEU) உறுப்பு கல்லூரிகளுக்கு மட்டுமே ஒதுக்கீடுகள் பொருந்தும். பிற பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்லூரிகள் (தன்னாட்சி, நிகர்நிலை அல்லது வேறு) முதன்மை கல்வி அலுவலர்களை அணுகினால், அக்கல்லூரிகளுக்கு தகுந்த ஒதுக்கீட்டை CEO அளவிலேயே வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், சிறப்புக் கல்விக் கல்லூரிகள் கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கு பள்ளிகளை ஒதுக்கீடு செய்யக்கோரி முதன்மைக் கல்வி அலுவலர்களை அணுகினால், அக்கல்லூரிகளுக்கு தகுந்த ஒதுக்கீட்டை தங்கள் அளவிலேயே செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இவ்வொதுக்கீட்டில் தேவைப்படும் எண்ணிக்கையை விட கூடுதலாக உள்ள ஆசிரியர் பயிற்சி மாணவர்களை அருகில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளுக்கு கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அளவிலேயே நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி மாணவர்களை ஒதுக்கீடு

செய்யப்பட்ட உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிக்கும், அருகிலுள்ள நடுநிலைப்பள்ளிக்கும், இரு பிரிவுகளாக பிரித்து சுழற்சி முறையில் அனுப்பி கற்றல் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி மாணவர்களை கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கென எந்த பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த உயர்நிலை/மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரே அவர்களுக்கு உரிய சான்றிதழ்களை வழங்க வேண்டும்.

பயிற்சி மாணவர்கள் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் 12.09.2024 முதல் பள்ளிகளுக்கு வருகை புரிவார்கள். அவர்களை பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணியில் ஈடுபடுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**: மாவட்ட வாரியாக ஒதுக்கீடு (மின்னஞ்சல் மூலம்)

09/9/24

இயக்குநர்

09.09.24

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்